DEPOSITION OF WITNESS
CHAPTER ORDER XVIII CODE OF CIVIL PROCEDURE
IN THE COURT OF DISTRICT MUNSIF, AUNDIPATTI
O.S. No.62 /2017

Deposition of Witness : DW1

| | | | |
|---|---|---|---|
| Name | : பவுனம்மாள் | Father's/Husband's Name : | கருப்பத்தேவர் |
| Village | : ஆண்டிபட்டி | Taluk | : ஆண்டிபட்டி |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : 60 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 21.08.2026

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை. சாட்சி வழக்கறிஞர் இல்லாமல் சாட்சியம் அளிக்க தனக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை என்று தாமாக முன் வந்து சொல்லியதின் பேரில் வாதி தரப்பு வழக்கறிஞர் குறுக்கு விசாரணை செய்கிறார்.

**வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

1) வாதிகள் என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் நான் கிரையம் வாங்கி வீடு கட்டியுள்ள இடத்தை வாதிகள் அவர்களுடைய இடம் என்று வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். வாதி தாக்கல் செய்துள்ள வழக்குரையை படித்து பார்த்து தெரிந்து கொண்டேனா என்றால் எனக்கு படிக்கத் தெரியாது. மற்றவர்கள் படித்து காட்டி விபரம் தெரிந்து கொண்டேன். நான் கிரையம் வாங்கிய இடமும், வாதிகள் கிரையம் வாங்கிய இடமும் ஆதியில் கொண்டன் செட்டி என்பவருக்கு பாத்தியப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பி.வா.சா.ஆ.1 சித்தர சாம்பானுடைய பிள்ளைகளான வேலு, ஒய்யனன் மற்றும் வேலுவின் மகன் மொக்கையன் ஆகிய மூன்று பேரும் சேர்ந்து திருமலை நாயக்கருக்கு கிரையம் கொடுத்தாக இருக்கிறது என்றால் எனக்கு அது பற்றி தெரியாது, எனக்கு எழுத படிக்கத் தெரியாது.

2) பி.வா.சா.ஆ.1 ல் கண்ட சித்திரை சாம்பான் கடந்த 22.07.1929 ம் தேதி 1 ஏக்கர் 89 செண்ட் நிலத்தை கிரையம் வாங்கியிருக்கிறார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நாங்கள் வாங்கியது மட்டும் தான் எனக்கு தெரியும். சித்தர சாம்பானுக்கு எத்தனை பிள்ளைகள் என்று எனக்கு தெரியாது. முத்தன் மட்டும் அவரது மகன் என்று தெரியும். சித்திரை சாம்பான் இறந்த பிறகு அவரது வாரிசுகளான வேலு, செல்லாண்டி, ஒய்யனன், சுப்பைன் மற்றும் முத்தன் ஆகியோர் அனுபவம் செய்து வந்தார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அதன்பிறகு சித்திரை சாம்பான் வாரிசுகள் ஆளுக்கு 39

செண்ட் வீதம் வாய்க்கரால் பாகத்தில் பிரித்து கொண்டார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. சர்வே எண்.477/1ல் 4 ஏக்கர் 34 செண்டில் வடமேல்பக்கம் செண்ட் 76 ல் இதில் மேல்பக்கம் 38 செண்ட் உள்ள நில்தை அழகர்சாமி என்பவருக்கு 29.04.1959 ம் தேதி ரூ.250 க்கு பதிவு செய்யப்பட்ட ஒத்தி மூலம் முத்தன் ஒத்தி பத்திரம் எழுதி கொடுத்திருக்கிறார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி பத்திரத்தில் மேற்படி 38 செண்ட் நிலத்திற்கு நான்குமாலாக வேலன் நிலத்திற்கு மேற்கும், தெற்கும், பாதைக்கும் கிழக்கு, ஒய்யனன் நிலத்திற்கும் வடக்கு என்று குறிப்பிட்டு ஒத்தி பத்திரம் எழுதி கொடுக்கப்பட்டிருக்கிறது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

3) சர்வே எண்.477/1B1, 477/1B2 ற்கும் முத்தன் என்பவர் பெயரில் பட்டா தாக்கலாகியிருந்தது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. முத்தனுக்கு எத்தனை வாரிசுகள் என்று எனக்கு தெரியாது. முத்தனுக்கு சுப்பையா என்ற ஒரே வாரிசு என்றால் அது பற்றி எனக்கு தெரியாது, எனது கணவர் முத்தன் வகையறா என்று சொல்லியிருக்கிறார் அவ்வளவு தான் எனக்கு தெரியும். சுப்பையனுக்கு சீனிக்காளை, செல்லக்காளை என்ற ஆண்டி, பால்ராஜ் ஆகியோர்கள் வாரிசுகள் என்றால் எனக்கு தெரியாது. சர்வே எண்.477/1B1 ல் 19 செண்டும், 477/1B2 ல் 5 செண்டுமாக 24 செண்ட் நிலத்தை சுப்பையன் தனது மகன்களுக்கு கடநத் 08.04.2003 ம் தேதி தானமாக எழுதி கொடுத்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி தானசெட்டில்மெண்ட் எழுதி கொடுத்தபிறகு சுப்பையன் மக்கள் தான் மேற்படி 24 செண்ட் நிலத்தை அனுபவ்ம செய்து வந்தார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

4) 23.04.2003 ம் தேதி வாதிகளின் பவர் ஏஜெண்டான கோபாலுக்கு அந்த சொத்துக்கள் சம்பந்தமாக ஒரு பொது அதிகார பத்திரம் எழுதி கொடுத்திருக்கிறார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அதன்பிறகு கடந்த 10.06.2003 ம் தேதி மேற்படி கோபால் தாவா 1வது லக்க சொத்தை 2ம் வாதிக்கும், 2ம் லக்க சொத்தை 1ம் வாதிக்கும் கிரையம் எழுதி கொடுத்திருக்கிறார் என்றால் அதை பற்றி கேள்விப்பட்டேன். அதன்பிறகு கடந்த 01.06.2011 ம் தேதி 2ம் வாதி கோபாலுக்கு 1ம் லக்க சொத்தை பொறுத்து ஜெனரல் பவர் ஆப் அட்டர்னி எழுதி கொடுத்தார் என்றாலும், அதேபோல் கடந்த 09.07.2010 ம்தேதி 1ம் வாதி கோபாலுக்கு 2ம் லக்க சொத்தை பொறுத்து ஜெனரல் பவர் ஆப் அட்டர்னி எழுதி கொடுத்தார் என்றால் வழக்கிற்கு பிறகு

கேட்டு தெரிந்து கொண்டேன். பி.வா.சா.ஆ.1 முதல் 18 ஆவணங்களில் உள்ள விபரங்கள் பற்றி தெரியுமா என்றால் நான் படிக்கவில்லை, எனக்கு தெரியாது.

5) எங்களது எதிர்வழக்குரையில் நாங்கள் கிரையம் வாங்கிய சொத்திற்கு மேற்கு பக்கம் முத்தன் வகையறா நிலம் இருப்பதாகத் தான் எதிர்வாதம் செய்கிறோம் என்றால் சரிதான். எங்கள் இடத்திற்கு மேற்கு பக்கம் முத்தன் வகையறா நிலம் தான் இருக்கிறது. முத்தன் வகையறா நிலத்திற்கு மேற்கு பக்கம் மூக்கம்மாள் நிலம் இருக்கிறது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வாதியின் வழக்குரையில் தாவா சொத்திற்கு மேற்கு பக்கம் மூக்கம்மாள் நிலம் என்று காட்டப்பட்டிருப்பதை தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. நான் கிரையம் வாங்கிய இடத்திற்கும், முத்தன் இடத்திற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரிதான். முத்தனுக்கு பாத்தியப்பட்ட இடத்தை தான் வாதிகள் கிரையம் வாங்கியுள்ளார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ.12 ன்படி எனது கணவர் பிராது சொத்துக்களில் பாத்தியமில்லாத நபர்களிடம் கிரையம் வாங்கி ஆக்கிமிப்பு செய்து வீடு கட்டியிருக்கிறோம் என்றால் சரியல்ல. கிரையம் வாங்கும்போது வில்லங்கம் பார்த்து தான் வாங்கினோம். வில்லங்கம் இல்லை என்று சொன்னார்கள். நாங்கள் வில்லங்கம் பார்த்த ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

6) 1987ம் ஆண்டிற்கு முந்தைய வில்லங்கச் சான்றிதழ் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 1987ம் ஆண்டிற்கு முந்தைய வில்லங்கச் சான்றிதழ் தாக்கல் செய்திருந்தால் சித்திரை சாம்பான் மற்றும் அவரது வாரிசுகள் ஏற்படுத்திய பதிவுகள் தெரிந்துவிடும் என்பதால் தான் அதை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தை நீதிமன்ற ஆணையர் மூலம் அளவீடு செய்த விபரம் எனக்கு தெரியாது, அவர் அறிக்கை தாக்கல் செய்த விபரம் எனக்கு தெரியாது. நீதிமன்ற ஆணையர் அறிக்கையில் தாவா சொத்திற்கு மேற்கு பக்கம் சர்வே எண்.477/1A1/4 மூக்கம்மாளுக்கு பாத்தியப்பட்ட நிலம் என்று காட்டப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி நீதிமன்ற ஆணையர் அறிக்கையில் மூக்கம்மாள் இடம் காட்டப்படவில்லை என்றாலும் நாங்கள் முத்தன் வகையறா நிலத்தை ஆக்கிரமிப்பு செய்து வீடு கட்டியுள்ளோம் என்றால் சரியல்ல.

7) வாதி வழக்கு தாக்கல் செய்யும்போது நாங்கள் வீடு கட்டிக்கொண்டு இருந்தோம் என்றால் நான் வீடு கட்டி 9 வருடங்களாகிறது. நான் வீடு கட்டியுள்ள இடம்

ஆண்டிபட்டி பேரூராட்சிக்கு உட்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. கட்டிட அனுமதி எதுவும் தாக்கல் செய்திருக்கிறோமா என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. வாதி வழக்கு தாக்கல் செய்யும் போது நாங்கள் வீடு கட்டி கொண்டிருந்தோம் என்றாலும், அதனால் தான் வாதி ஆக்கிரமிப்புகளை அகற்றி சுவாதீன ஒப்படைபபு பரிகாரம் கோரியிருக்கிறார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வழக்கு விபரம் எனக்கு தெரியாது என்றாலும், அதனால் என்னுடைய சாட்சியம் ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல என்றாலும் சரியல்ல. வாதிக்கு அவர் கோரிய பரிகாரம் அவருக்கு கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

**மறு விசாரணை : இல்லை**

Taken down by me/before me in open court on 21.08.2026 and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.

E SUGANTHAN
Digitally signed by E SUGANTHAN
Date: 2026.08.21 13:30:38 +0530

District Munsif,
Aundipatti.